வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    19.12.2024 வியாழக்கிழமை    இதழ் : 353    பக்கங்கள் : 12

# 2028ஆம் ஆண்டிலும் எங்களின் ஆட்சியே!

## சபையில் நேற்று ஜனாதிபதி சபதம்

கொழும்பு, டிசெம்பர் 19

**எதிர்வரும் 2028 ஆம் ஆண்டிலும் தம்முடைய அரசாங்கமே ஆட்சியமைக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்**

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்துக்கு வருகை தந்தது டன் விசேட உரையையும் ஆற்றினார்.

அதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 2028 ஆம் ஆண்டில் கடனை செலுத்த வேண்டியுள்ளதால் மீண்டும் எம்முடைய நாடு வங்குரோத்து நிலைக்கு செல்லும் என்ற கருத்தை விதைக்க எத்தனிக்கின்றனர். எதிர்வரும்



2028 ஆம் ஆண்டும் எம்முடைய அரசாங்கமே ஆட்சியமைக்கும்.

ஆகவே 2022 ஆம் ஆண்டு இடம்பெறும் நிலைமை மீண்டும் நாட்டில் ஏற்படாது நாம் இடமளிக்கப் போவதில்லை. 11

# போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அர்ச்சுனா எம்.பி. மீது மானநட்ட வழக்கு!

## 100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியினால் பாராளுமன்ற உறுப்பினர்தரு மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக நேற்று புதன்கிழமை அவதூறு வழக்கொன்றை யாழ்.மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்து 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்குத் தொடர்பான கட்டாணை வழங்குவது தொடர்பாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதிபதி அ.அ.ஆனந்தராஜா முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது வழக்காளி சார்பில் 11

# நாட்டைக் காட்டிக் கொடுக்கும் எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவில்லை!

## இந்திய விஜயம் குறித்து அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, டிசெ. 19

நாட்டுக்கு அச்சுறுத்தலான எந்தவொரு உடன்படிக்கையையும் இந்தியாவுடன் தற்போதைய அரசாங்கம் கைச்சாத்திடவில்லை என வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்து தெரிவித்த கருத்துகளை தற்போது மீளப் பெறத் தயாரா? என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற 11

# அநுர விக்கிரமசிங்கவின் ஆட்சியா நடைபெறுகிறது?

## சபையில் எதிரணி கேள்வி

கொழும்பு, டிசெ. 19

ரணில் - ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெறுவதாக கடந்த காலத்தில் நாம் விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அவ்வாறே பின்பற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் அநுர விக்கிரமசிங்க ஆட்சியா நாட்டில் நடைபெறுகிறதென கேள்வியெழுப்புகிறோம் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். 11

# அர்ச்சுனா எம்.பியின் உரை ஹன்சார்ட்டிலிருந்து நீக்கம்

கொழும்பு, டிசெ. 19

பாராளுமன்றத்துக்குள் முறையற்ற விதமாக பேசிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் உரை ஹன்சார்ட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் யாழ். போதனா வைத்தியசாலை சுகாதாரத் தொண்டர்களின் பிரச் னையை எழுப்புகிறேன் என தெரிவித்து - வைத்தியர் த.சத்தியமூர்த்தி மீதான 11

# 16ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நேற்று மாலை வரை இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 19

அரிசி இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து நேற்று பிற்பகல் 3:30 மணி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 16,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 6,000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 10,000 மெற்றிக் தொன் நாட்டரிசியும் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11



# சீனாவுக்கு நன்றி கூறிய அநுர!

கொழும்பு, டிசெ. 19

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்கு கடன் பெற்றுக்கொடுத்தமைக்காக சீன அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் ஆகியோருக்கு இடையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற 11

# வரியில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள அரசு திட்டம்

## சபையில் ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

சர்வதேச நாணய நிதியத்துடனான புதிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் வருமானம் ஈட்டும்போது செலுத்தப்பட வேண்டிய வரியில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாக ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று விசேட உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதன்படி தற்போதுள்ள ஒரு இலட்சம் ரூபாய் என்ற, வருமானம் ஈட்டும் போது செலுத்த வேண்டிய வரிக் கான வருமான எல்லை, ஒரு 11

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; வழக்கின் தீர்ப்பு 31 ஆம் திகதி

கொழும்பு, டிசெ. 19

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது

அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பான விரிவான விசாரணையை எதிர்வரும் 31ஆம் திகதி 11

# 2025 பெப். முதலாம் திகதி முதல் சொகுசு வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, டிசெ. 19

2025ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனிப்பட்ட பாவனைக்கான சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். 11

# வடக்கு மாகாணத்துக்கு இரு புதிய செயலாளர்கள்!



யாழ்ப்பாணம், டிசெ. 19

வடக்கு மாகாண சபைக்கு இரண்டு புதிய செயலர்களுக்கான நியமனம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நேற்று புதன்கிழமை மதியம் ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண பொதுச்சேவை 11

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் 30 நபர்கள்!

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

கொழும்பு, டிசெ. 19

**சட்டமா அதிபர் திணைக்களத்தின் தரவுகளின்படி கடந்த ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 6 பேரும், உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 24 பேரும் பயங்கரவாதத்தடைச் சட்டத் தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்குப் புறம்பான பயங்கரவாதத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், அதனை முன்னிறுத்திய நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் செயற்பாட்டாளர்களில் ஒருவரான அம்பிகா சற்குணநாதன், கடந்த ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை தகவல் அறியும் உரிமைச்சட்டத் தின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிப் பெற்றிருக்கிறார்.

சட்டமா அதிபர் திணைக் களத்தினால் வழங்கப்பட்டிருக்கும் தரவுகளின் பிரகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய குற்றச்செயல்களுக்காக 6 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதுடன், 34 பேர் வழக்குத் தொடரப்படாமல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை வழக்கு தொடரப்பட்டு, பிணையில் விடுவிக்கப் பட்டிருப்போரின் எண்ணிக்கை 49 ஆகவும், 2020 - 2023 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முழுமையாக விடுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆகவும் காணப் படுகின்றது.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக இச் சட்டத்தின்கீழ் 24 பேர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதுடன், 34 பேர் வழக்குத்தொடரப்படாமல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு 54 பேர் வழக்குத் தொடரப்பட்டு பிணையில் விடுவிக் கப்பட்டிருப்பதுடன், 2019 - 2023 வரையான காலப் பகுதியில் 365 பேர் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அம்பிகா சற்குணநாதன், இங்கு விடுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படுவதானது, பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் தன்னிச்சையான முறையில் கைது செய்தல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் என்பன சாதாரணமாகிவிட்டதைக் காண்பிப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

(அ)

# மாரடைப்பினால் மரணிப்போரின் எண்ணிக்கை வவுனியாவில் உயர்வு!

வவுனியா, டிசெ. 19

வவுனியா பொது வைத்திய சாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையுமான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு அமைய குறித்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயது வரையானவர்களில் ஒருவரும் 40 தொடக்கம் 60 வயது வரையானவர்களில் 13 பேரும் 60 தொடக்கம் 100 வயது வரையானவர்களில் 31 பேரும் என 45 பேர் இவ்வாறு மாரடைப் பால் மரணமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மனித உரிமை மீறல் குறித்து நாளாந்தம் 60 முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ. 19

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நாளாந்தம் 60 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சேவா தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ், கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் அறுநூறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

தாமதமாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் ஒரு வசனத்தையேனும் திருத்தவில்லை

## ஹர்ஷடி சில்வா சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 19

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தும் அரசாங்கம் ஒரு வசனத்தையேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை மேன்படுத்துவதற்காகவேண்டி இந்திய அரசாங்கத்ததுடன் பல்வேறு இணக்கப்பாடுகளுக்கு அரசாங்கம் வந்திருப்பதாக தெரியவருகிறது. இதனையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எமது அண்மை நாடான இந்தியாவுடன் நாங்கள் சிறந்த உறவை வைத்திருக்க வேண்டும். எப்போதும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நாடாகும்.

என்றாலும் பெற்றோலியம் குழாய் தொடர்பில் இந்தியாவுடன் எந்த தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ளப் போவதில்லை என தேசிய மக்கள் சக்தி தேர்தலின் போதும் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் தெரிவித்து வந்தது. அதே போன்று வலுசக்தியை இணைப்பதில்லை என தெரிவித்து வந்தது.

ஆனால் தற்போது இந்த இரண்டு விடயங்களுக்கும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவே எமக்கு தெரியவருகிறது. இது இடம்பெறவேண்டும் என்பதே எமது நிலைப்பாடும். நாணய நிதியத்தின் இணக்கப்பாடும் அவ்வாறே முன்னெடுத்துச் செல்லுங்கள் என நாங்கள் தெரிவிப்பதில்லை. மாறாக அதில் திருத்தங்களை மேற்கொண்டு முன்னுக்கு செல்ல வேண்டும் என்றே தெரிவிக்கிறேன்.

சர்வதேச இறையாண்மை பிணைப் பத்திர மறுசீரமைப்பு தொடர்பாக அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் உண்மையை கூற முடியாது போயுள்ளது. இணங்கிய ஒப்பந்தமானது பிணை முறியாளர்களுக்கு சார்பானது.

சவதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தும் அரசாங்கம் ஒரு வசனத்தையேனும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார். (அ)

# தமிழரசு 75ஆவது ஆண்டு பூர்த்தி; ஸ்தாபகத் தலைவருக்கு அஞ்சலி





யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு நேற்று 75 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு, இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் தந்தை செல்வாவின் சிலைக்கு இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை சேனாதிராசா, சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் வைத்து தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வன்னி பாடசாலைகளில் வளங்கள் பற்றாக்குறை!

## சபையில் சுட்டிக்காட்டிய ரவிகரன்

கொழும்பு, டிசெ. 19

வன்னிப் பாடசாலைகளில் உள்ள வளக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாடசாலைகளுக்கான வளங்களைப் பகிரும்போது அனைத்துப் பாடசாலைகளுக்கும் வளங்களை சமமாகப் பகிருமாறும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்புதொடர்பான [illegible] விடயங்களை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலைகளுக்கு வளங்கள் சமத்துவ அடிப்படையில் பகிரப்படவேண்டும். இன்னமும் வன்னி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் இலத்திரனியல் வளப்பட்ட வளநிரப்பல் போதுமான அளவில் இல்லை.

வன்னியில் முல்லை வலயம் மற்றும், மன்னார் வலயங்களில் கணினி வள நிலையம் இல்லை. பாடசாலைகளில் சுகாதாரப் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை.

அந்தவகையில் கல்விசாரா ஊழியர்கள், பாடசாலைப் பணியாளர், இரவு நேரக் காவலாளி இப்படியான தேவைகள் உள்ளன.

குறிப்பாக வன்னியில் போதுமான நிதியிடல் இல்லை. இன்றளவும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் ஒரு கணினியுடன் இயங்கும் பாடசாலைகள் உள்ளன.

அதேவேளை மாணவர்களிடையே விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் வகையிலான முழுமையான வளங்கள் வழங்கப்படவேண்டும். - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.12.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## தமிழ் அரசுக் கட்சியின் 75 ஆண்டுகள்

இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவுற்றிருக்கின்றன. 1975ஆம் ஆண்டு, 12ஆம் மாதம், 18ஆம் திகதி, இலங்கை தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. கட்சியின் ஸ்தாபகரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஏகமனதாக கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இது ஒரு பெரிய பொறுப்பு ஆனால், தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இயக்கம் தேவை என்பதை என்னைப் போல் நீங்களும் உணர்ந்திருப்பதால் இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று செல்வநாயகம் தனது அங்குரார்ப்பண உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் அரசுக் கட்சியை ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சியென்று செல்வநாயகம் அறிவித்தார். அதாவது, தமிழ் மக்களுக்கு சமஷ்டித் தீர்வை அடைவதுதான் தமிழ் அரசுக் கட்சியின் இலக்கு. கட்சியின் முதலாவது மகாநாடு 1951ம் ஆண்டு திருகோணமலையில் இடம்பெற்றது. நாங்கள் ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றோம் - நாங்கள் அந்த இலக்கில் வெற்றிபெற எல்லாம் வல்ல கடவுள் எங்களுக்கு துணைபுரிவார் என்று நம்புகின்றோம் - ஒரு வேளை, நாங்கள் எங்களுடைய இலக்கில் தோல்வியுற்றால் எங்களுடைய அடுத்த தலைமுறை எங்களுடைய பதாகைகளை சுமந்து செல்லும், என்று செல்வநாயகம் மகாநாட்டு உரையில் குறிப்பிட்டார்.

சமஷ்டியை இலக்காகக் கொண்டு கட்சியை ஆரம்பித்த செல்வநாயகம் 1957 பண்டா - செல்வா உடன்பாடு மற்றும் 1965 டட்லி - செல்வா உடன்பாட்டின் போது, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியிருக்கவில்லை - ஏன் செல்வநாயகம் அதனை வலியுறுத்தவில்லை?. செல்வநாயகம் தொடர்பிலான சுயசரிதையை எழுதிய அவரது மருமகன் கலாநிதி ஏ.ஜே.வில்சன் இதற்கான பதிலை கூறுகின்றார். செல்வநாயகம் சமஷ்டியை ஒரு தனிப்பாய்ச்சலில் அடைய முடியுமென்று நம்பவில்லை - அவர் எப்படியான தலைவர் என்றால் கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவர் இல்லை என்கின்றார் வில்சன். ஆனால், இன்றுள்ள தமிழ் அரசு கட்சியினரோ கேக்கோ, பாணோ அதனை பின்னர் பார்த்துக் கொள்வோம், முதலில் எங்களுடைய கதிரைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

1970களுக்கு பின்னரான அரசியல் சூழலில் இலங்கை தமிழ் அரசுச் கட்சியின் பொருத்தப்பாடு தொடர்பில் செல்வநாயகத்திடம் கேள்வி எழுந்தது. இந்தப் பின்புலத்தில்தான், தமிழர் ஐக்கிய கூட்டணி ஒன்றை கட்டியெழுப்புவது தொடர்பில் செல்வநாயகம் சிந்திக்கின்றார். இதுவே பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்துடன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் முடிவுற்றது.

உண்மையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியை, செல்வநாயகமே கைவிட்டுவிட்டார். அவ்வாறு கைவிடப்பட்ட கட்சி எவ்வாறு மீண்டும் தேர்தல் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டது என்பதை அரசியல் அரங்கிலுள்ள அனைவருமே நன்கறிவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்கொண்டு செல்வதற்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சி தேவை என்னும் தேவை ஏற்பட்ட போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழ் அரசுக் கட்சிக்கு தூசிதட்டினார். ஆனால், இந்த உண்மையை மறைத்து, தமிழ் அரசு கட்சியானது, 75 வருடங்களாக, தமிழ் மக்களின் கட்சியாக இருப்பதான கதைகள் புனையப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கை அடைவதில் செல்வ நாயகத்தால் உருவாக்கப்பட்ட இரண்டு கட்சிகளுமே தோல்விடைந்துவிட்டன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் அரசுக் கட்சி செல்வநாயகத்தின் காலத்திலேயே தோல்வியடைந்துவிட்டது. அடுத்தது அவரது மறைவுக்கு பின்னர் தோல்வியடைந்தது.

தமிழ் மக்கள் மத்தியில் புதிய அரசியல் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமையுள்ள மாற்றுக் கட்சியொன்று - அல்லது கட்சிகள் உருவாகி, உருப்படியாக வளராத நிலையில்தான், தமிழ் அரசு கட்சியால் மக்கள் மத்தியில் சீவிக்க முடிகின்றது. செல்வநாயகத்தால் பொருத்தமற்றது - என கைவிடப்பட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது, இன்றும் பிரதான கட்சி என்னும் அடைமொழியுடன் இயங்கிவருவது தமிழ் மக்களின் சாபமா அல்லது வரமா என்னும் கேள்விக்கான பதிலை எதிர்கால வரலாற்றில்தான் ஒருவர் தேட வேண்டும். கடந்த 75 வருடங்களில் அடைய முடியாமல் போன ஒன்றை இன்றைய சூழலில் எவ்வாறு தமிழ் அரசுக் கட்சியால் அடைய முடியும்?

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

*யாழ்ப்பாணம், டிசெ.19*

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் மருத்துவமனையின் நோயாளர் நலன் புரிச் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அ. சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத்திரண, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ- 05)

## பேராசிரியர் சிறீகணேசனுக்கு இணுவிலில் பாராட்டு நிகழ்வு

*யாழ்ப்பாணம், டிசெ.19*

இணுவில் கலை இலக்கிய வட்டம் மற்றும் இணுவில் அறிவாலயம் இணைந்து நடத்தும் பேராசிரியர் கலாநிதி கந்தையா சிறீ கணேசனுக்கான பாராட்டு நிகழ்வு இணுவில் கந்த சுவாமி கோவில் முன்பாகவுள்ள அறிவாலயத்தில் நாளைமறுதினம் 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த பாராட்டு விழாவில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் மூதறிஞர் கவிஞர் சோ. பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவமும் வர்த்தகமும் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா உள்ளிட்டோர் வாழ்த்துரைகள் வழங்குவர்.

## சுவரொட்டி போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். வேம்படி மாணவி கௌரவிப்பு





*யாழ்ப்பாணம், டிசெ.19*

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ. பி. ஜே. அப்துல்கலாமின் 93ஆவது பிறந்த நாள் நினைவாக யாழ். இந்தியத் துணைத் தூதரகம் அவரது சிந்தனையின் கீழ் நடத்திய சுவரொட்டிப் போட்டியில் மேற்பிரிவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி தரம் 7 இல் கல்வி கற்கும் ஷா. தேவந்திஹா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்த நிலையில், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியால் மாணவிக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

(எ)

## கசிப்பு காய்ச்சும் உபகரணங்களுடன் அரியாலையில் ஒருவர் கைது

*யாழ்ப்பாணம், டிசெ.19*

யாழ்ப்பாணம், அரியா லைப் பகுதியில் 60 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தும் உபகரணங்களும் அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேகநபர் யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத் தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**மிதுனம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். புது பொருள் வந்து சேரும்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றைவிட்டுக் கொடுப்பீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

# தனியார் நிறுவனத்துக்கு சீல்வைப்பு வவுனியாவில் அதிகாரிகள் அதிரடி

வவுனியா, டிசெ.19

விவசாய உற்பத்திகள் மற்றும் உள்ளீடுகளை விற்பனை செய்துவரும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தில் தரமற்ற தானியங்கள் உள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் வவுனியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் உள்ள குறித்த நிறுவனம் அதிகாரிகளால் ஆய்வுசெய்யப்பட்டது.

இதன்போது, தரமற்றவகையில் காணப்பட்ட பச்சைபயறு



ஒரு தொகை மீட்கப்பட்டது.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த திரவப்பசளை ஒரு தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றின் தரம் தொடர்பாக ஆராய்வதற்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன் பரிசோதனைகள் முடிவடையும் வரை அவற்றை விற்பனை செய்ய வேண்டாம் என்று அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன், அந்த நிறுவனம் சீல்வைத்து மூடப்பட்டது. (எ-10)

# யாழில் விபத்தில் சிக்கிய ஐவர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.19

கொழும்பிலிருந்து பயணி களை ஏற்றி வந்த அதிசொகுசு பேருந்து ஒன்று, சிறிய ரக உழவியந்திரத்துடன் மோதி விபத் தில் சிக்கியதில் ஐவர் காயம டைந்தனர்.

நேற்றுக் காலை ஏ - 9 வீதி யில் மிருசுவில் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் சாவ கச்சேரி ஆதார மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்ப ாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ-05)



# அரசாங்க அலுவலர்கள் சிலரிடம் மக்களை பழிவாங்கும் சிந்தனை

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

மன்னார், டிசெ.19

அரசாங்க அலுவலர்களிடம் அதுவும் புதிதாக பதவியேற்ற நிர்வாக அலுவலர்கள் சிலரிடம் மக்களை பழிவாங்கும் - அலைக்கழிக்கும் சிந்தனை இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இந்த எண்ணங்களை மாற்றுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை, போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை, எங்கள் மாகாணத்தை நாங்கள் எல்லோரும் இணைந்துதான் முன்னேற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் "வடந்தை" நூல் வெளியீடும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"எமது சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் சிறுவயதிலிருந்தே பழக்க வேண்டி உள்ளது. அதற்காக ஒரு பாடவேளையை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சின் செயலருடன் கலந்துரையாட உள்ளேன். வீதிகளில் குப்பைகளை வீசி எமது மாகாணத்தை அசிங்கமாக்குவதில் அநேகர் படித்தவர்கள்தான்"- என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# சந்தைசுற்றுவட்ட வீதியில் நடைபாதை அமைப்பு!

## வியாபாரிகளை அகற்றிய பொலிஸார்



வவுனியா, டிசெ.19

வவுனியா சந்தைசுற்றுவட்ட வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணி நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பாதையில் இருபக்கமும் வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுகாதாரமற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. இதனால், அந்த பாதையில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்ட வவுனியா நகர சபை அந்த வீதியின் முகப்பு பகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் அங்கு மரக்கறி விற்ப னையில் ஈடுபட்ட வியாபாரிகள் பொலிஸாரால் அகற்றப் பட்டிருந்தனர். (எ-10)

# படகு விபத்து

யாழ்ப்பாணம், டிசெ.19

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளானது.

காலநிலை மாற்றம் காரணமாக இன்று 19ஆம் திகதி வரை மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாமென எச்சரிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த எச்சரிக்கையை மீறி மீன்பிடிக்கச் சென்ற படகே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

படகில் பயணித்த இருவரும் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பியதுடன் ஒரு தொகுதி மீன்பிடி வலைகள் கடலுடன் அடித்துச்செல்லப்பட்டன

சம்பவ இடத்துக்கு விரைந்த அப்பகுதி மீனவர்கள் குறித்த இரு மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டு விபத்துக்குள்ளான படகையும் கரைக்கு கொண்டுவந்தனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் பெரும்பான்மை ஆணைக்கு அஞ்சப்போவதில்லை!

## சமிந்த விஜேசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

**அரசாங்கத்தின் பெரும்பான்மை ஆணைக்கு அஞ்சப் போவதில்லை என எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது இடம்பெற்ற வாதபிரதிவாதத்தின் காரணமாகவே அவர் இவ்வாறு சபையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளருக்கு விவாதம் பற்றி கற்பிக்கப்போவதில்லை. எனக்கும் சபாநாயகருக்கும் இடையிலான பிரச்னைக்கு இடையில் ரை கோட் அணிந்த மற்றுமொருவர் தலையீடு செய்கின்றார். அதனை விவாதம் என்றல்லா எடுத்துக் கொள்ள வேண்டும். ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் சிறுபிள்ளை போல நடந்து கொள்கின்றார். அதற்கு வெட்கப்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் பெரும்பாண்மை ஆணையை வைத்து எம்மை ஒடுக்க எத்தனிக்க வேண்டாம். எமக்கு வழங்கப்பட்டிருப்பது மாறுபட்ட மக்கள் ஆணையாகும். அதனை அரசாங்கம் நினைவிற்கொள்ள வேண்டும். ஆளும் தரப்பிற்கு கிடைக்கப்பெற்றுள்ள மக்கள் ஆணைக்கு நாம் அச்சமடையப் போவதில்லை. ஆகவே இந்த சமயத்தில் நான் வாய்மூல வினாவுக்கான கேள்வியை எழுப்பப்போவதில்லை-என்றார். (அ)

# ஜனாசா எரிப்பு விவகாரத்தை அரசு வெளிப்படுத்த வேண்டும்

## எஸ்.எம்.மரிக்கார் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 19

பிரதேச செயலக மட்டத்திலான தகனம் செய்யப்பட்ட ஜனாசாக்களின் எண்ணிக்கையையேனும் வெளிப்படுத்துமாறு எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய திட்டமிடப்பட்ட ரீதியில் முஸ்லிம் மக்களை பழிவாங்கும் நோக்கில் நீரின் ஊடாக கொவிட் தொற்றுப்பரவும் என்ற கருத்தை தோற்றுவித்தனர். அதன் ஊடாக ஜனாசாக்களை எரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆகவே நாட்டு ப்பிரஜைகள் என்ற வகையில் தகனம் செய்யப்பட்ட ஜனாசாக்கள் குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டிய உரிமை உள்ளது. ஆகவே பிரதேச செயலக மட்டத்தில் எரிக்கப்பட்ட ஜனாசாக்களின் எண்ணிக்கையையேனும் வெளிப்படுத்துமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கம் கடந்த அரசாங்கம் போன்று இனவாதமாக செயற்படாது என்ற நம்பிக்கையிலேயே நாம் இந்த வேண்டுகோளை அரசாங்கத்திடம் முன்வைக்கின்றோம்-என்றார். (அ)

# ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகள்!

கொழும்பு, டிசெ. 19

2005 - 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் பகிரங்கப்படுத்தினார்.

முன்னாள் பிரதமர் தி.மு ஜயரத்னவுக்கு அதிகூடிய தொகை வழங்கப்பட்டதாகவும் அவருக்கு 3 கோடி ரூபாய் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பணம் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் வருமாறு- எஸ்.ஏ ஜகத் குமார - 10 இலட்சம் ரூபாய் கே.பி.எஸ் குமாரசிறி- 953,430 ரூபாய் ஜயலத் ஜயவர்தன - 10 இலட்சம் ரூபாய் நாமல் குணவர்தன - 10 இலட்சம் ரூபாய் தர்மதாச பண்டா - 10 இலட்சம் ரூபாய் விதுர விக்கிரமநாயக்க - 15 இலட்சம் ரூபாய் விமலவீர திசாநாயக்க - 30 இலட்சம் ரூபாய் லகீ ஜயவர்தன - 16.2 இலட்சம் ரூபாய் பீ.சந்திரசேகரன் - 14 இலட்சம் ரூபாய்ஜோன் அமரதுங்க - 40 இலட்சம் ரூபாய் ஜோசப் மைக்கல் - 27 இலட்சம் ரூபாய் டீ.பி ஏக்கநாயக்க - 48 இலட்சம் ரூபாய் டபிள்யூ.எம்.எப் பொன்சேக்கா - 55 இலட்சம் ரூபாய் சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க - 90 இலட்சம் ரூபாய் எலிக் அளுவிஹாரே - 22 இலட்சம் ரூபாய் ரஞ்சித் அளுவிஹாரே - 8.6 இலட்சம் ரூபாய் ராஜித சேனாரத்ன - 100 இலட்சம் ரூபாய் கெஹெலிய ரம்புக்வெல - 110 இலட்சம் ரூபாய் எம்.கே.ஏ.டி.எஸ் குணவர்தன - 112 இலட்சம் ரூபாய் ரஞ்சித் சொய்ஸா - 188 இலட்சம் ரூபாய் மற்றும் தி.மு ஜயரத்ன - 300 இலட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 1040 வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 19

பாராளுமன்ற தேர்தல் தொடர்பான செலவு அறிக்கையினை சமர்ப்பிக்காத 1040 வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

குறித்த தரப்பினர் தொடர்பான ஆவணங்களை பொலிஸாருக்கு சமர்பிக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற தேர்தல் தொடர்பான செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் கடந்த 06ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

குறித்த செலவு அறிக்கை கையளிக்கப்படாமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்படுமாயின் குறித்த வேட்பாளர் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படும் நிலை ஏற்படுமென ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

இதனிடையே ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத 07 வேட்பாளர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மேலும் கூறினார்.

இது தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்-தேர்தல் செலவு அறிக்கை சமர்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பில் மூன்று சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அததாவது தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டிய திகதியில் அறிக்கை சமர்பிக்கப்படாமை மற்றும் குறித்த வேட்பாளரின் செலவு விவரங்கள் சரியான முறையில் சமர்ப்பிக்கப்படாமை, செலவளிக்க வேண்டிய தொகையைவிட அதிகளவு செலவளித்தல் என மூன்று வகையில் சட்ட நடவடிக்கை மேற்க்கொள்ள முடியும்.

இவ்வாறு சட்ட நடவடிக்கை மேற்க்கொள்ளும் பட்சத்தில் குறித்த நபர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பாராயின் குறித்த நபரின் பாராளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்படும். அத்துடன் எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு வேட்பாளராக போட்டியிட முடியாத நிலை ஏற்படுவதுடன் ஒரு லட்சம் ரூபாய் பணம் செலுத்த நேரிடும்.

இதன் மேலதிகமாக எதிர் வரும் ஆண்டு நடைபெறும் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை தேர்தலிலும் குறித்த நபர்கள் போட்டியிட முடியாது-என்றார். (அ)

# 2024 மூன்றாம் காலாண்டில் பொருளாதாரம் 5.5% வளர்ச்சி!

கொழும்பு, டிசெ. 19

2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் நேர்மறை வளர்ச்சி விகிதத்தில் 5.5 சதவீதமாக பதிவாகியுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நிலையான விலையில் (2015) 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2,987,544 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 3,151,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5.5 சதவீத நேர்மறையான வளர்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய பொருளாதார நடவடிக்கைகள், தொழில்துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவை பொருளாதார நடவடிக்கைகள் முறையே 3.0 சதவீதம், 10.8 சதவீதம் மற்றும் 2.6 சதவீதம் செல்வ வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

புலமைப்பரிசில் வினாத்தாள்

# விசாரணை அறிக்கை இன்று தாக்கல் செய்க!

கொழும்பு, டிசெ. 19

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் 3 வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கையை இன்று காலை 9 மணிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான 4 அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளான யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

# மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றவேண்டும்

கொழும்பு, டிசெ. 19

மக்களின் எதிர்பார்ப்பை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கம் தேர்தலில் கூறிய விடயங்களிலிருந்து மாறுபட்ட விதத்திலேயே செயற்படுகின்றது. மக்கள் எதிர்பார்த்த விடயங்களுக்கு அப்பால் அரசாங்கம் செயற்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது. மின் கட்டணம் எரிபொருள் விலை என்பவற்றை குறைப்பதாக கூறிய அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக தெரியவில்லை.

அனைத்து விடயங்களிலும் மாற்றுக் கருத்தை தெரிவித்து வந்த அரசாங்கம் தற்போது வேறுபட்ட விதத்தில் செயற்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இந்த அரசாங்கம் எதேச்சையாக செயற்படும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியை போன்று நெருக்கடியையே சந்திக்க நேரிடும்.

மக்கள் எம்மை தோற்கடித்து மக்கள் விடுதலை முன்னணியினருக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளனர் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ குறித்து இந்தியா கூறிய கருத்து என்ன?

## பகிரங்கப்படுத்த கோருகிறது பெரமுன

கொழும்பு, டிசெ. 19

**” ஒற்றையாட்சி, புதிய அரசமைப்பு மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பன தொடர்பில் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் என்னவென்பது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.”- என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது முதலாவது வெளிநாட்டு பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டமை மிகவும் நல்ல விடயமாகும். ஏனெனில் அன்று இந்திய எதிர்ப்புக் கொள்கையை கடைபிடித்துவந்த ஜே.வி.பியினர் இன்று ஆட்சிக்கு வந்த பிறகு அந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் பேசப்பட்ட விடயங்கள் என்னவென்பது தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி, நாடு திரும்பிய கையோடு தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கையில் சமஷ்டி முறைமையை ஏற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடிதம் அனுப்பியுள்ளார். நல்லாட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு பணி இறுதிப்படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளது. அந்த அரசமைப்பு ஒற்றையாட்சியை கைவிடும் வகையிலான அரசமைப்பாகும்.

இலங்கையின் ஒற்றையாட்சி, உத்தேச புதிய அரசமைப்பு அதேபோல புதிய அரசமைப்பு இயற்றப்படும்வரை அமுலில் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? இவை தொடர்பில் இந்திய தரப்பில் கூறப்பட்ட விடயங்கள் எவை. இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்- என்றார். (அ)

# நிஸாம் காரியப்பர் பதவிப்பிரமாணம்!

கொழும்பு, டிசெ. 19

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிஸாம் காரியப்பர் நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் அவர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தி பைசர் முஸ்தபா நேற்று முன் தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க, மொஹமட் இஸ்மாயில் முத்து மொஹமட் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் நேற்று முன் தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கெஹெலிய ரம்புக்வெலவின் கணக்குகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 19

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் நடைமுறை மற்றும் நிலையான வைப்பு கணக்குகள் இரண்டை ஒரு வார காலத்திற்கு இடைநிறுத்துமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இரண்டு கணக்குகளின் இருப்புத் தொகை சுமார் 200 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 53 (1) ஆவது பிரிவின்படி இவற்றை நேற்று முன் தினம் முதல் இடைநிறுத்தம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# கந்தளாய் குளத்தின் 4 வான் கதவு திறப்பு

கொழும்பு, டிசெ. 19

மழை காரணமாக திருகோணமலை - கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்வடைந்து வருகின்றமையால், கந்தளாய் குளத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த வான் கதவுகள் நேற்று முன் தினம் பிற்பகல் திறக்கப்பட்டுள்ளதாக, கந்தளாய் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 94 ஆயிரத்து 560 ஏக்கர் அடியாக பதிவாகியிருந்தது.

இதனையடுத்தே, வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மேல் மாகாணத்தில் 4000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள்!

கொழும்பு, டிசெ. 19

மேல் மாகாணத்தில் 4000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி ஆங்கிலம், தமிழ், தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்கள் தொடர்பான ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும், ஆங்கில பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருப்பதாக மேல் மாகாண பிரதம செயலாளர் தம்மிக விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு தீர்வாக பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் இளங்கலை பட்டதாரிகளைக் கொண்ட குழுவொன்று ஆசிரியர் பணிக்கு உள்வாங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாடசாலைகளில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவொன்றையும் அவர்களின் தகைமையின் அடிப்படையில் ஆசிரியர் பணிக்காக இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளின் படங்களைப் பயன்படுத்தி மோசடி!

கொழும்பு, டிசெ. 19

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளின் புகைப்படங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி, நிதி மோசடி செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விடுத்துள்ள அறிக்கையில்-தமது பணியகத்தின் உயர் அதிகாரிகளின் புகைப்படங்களை பயன்படுத்தி வட்ஸ்அப் தொடர்புகளை உருவாக்கி இஸ்ரேலில் வேலைவாய்ப்பினைப் பெற்று தருவதாகக் கூறி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், பணியகத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்ட புகைப்படங்களை தவறாக பயன்படுத்தியே இம்மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான மோசடியாளர்களிடம் சிக்க வேண்டாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை பணியகத்தின் துரித தொலைபேசி இலக்கமான 1989 அல்லது 071 759 35 93 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு வழங்குமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹோட்டல்களில் விசேட சோதனை !

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உள்நோயாளிகள் அதிகளவில் உணவு பெறும் பல ஹோட்டல்களில் மனித பாவனைக்குத் தகுதியற்ற உணவுகள் விற்பனை செய்யப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிட வரும் பலர் புஞ்சி பொரளை பிரதேசத்தில் உள்ள கடைகளிலேயே உணவுகளை பெற்றுச் செல்கின்றனர்.

சில கடைகளில் மனித பாவனைக்கு தகுதியற்ற உணவுகளை விற்பனை செய்வதாக பல்வேறு தகவல்கள் வெளியாகி இருந்தன.

அதன்படி பொரளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொது சுகாதார பரிசோதகர்கள் அந்த இடங்களை சோதனையிட்டனர்.

அங்குள்ள ஒரு கடையில், மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் கொடுக்க முடியாத அளவிலான உணவுப் பொருட்களை அதிகாரிகள் அழித்தனர்.அங்கு, பானங்கள் தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பழங்கள், மனித பாவனைக்கு தகுதியற்ற வகையில் காணப் பட்டமை கண்டுபிடிக்கப் பட்டது. (அ)

# தென்னை விவசாயிகளுக்கு விரைவில் உர நிவாரணம் !

கொழும்பு, டிசெ. 19

தற்போதைய தேங்காய் நெருக்கடிக்கு தீர்வாக தென்னை விவசாயிகளுக்கு உர நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் 55,000 மெற்றிக் தொன் உரத்தில் 27,500 மெற்றிக் தொன் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

”எமது அமைச்சின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தென்னந் தோப்புகளுக்கு 5 வருடங்களாக உரமிடப்படவில்லை. பொது மக்களும் உரம் இடும் நிலையில் இல்லை. சமீபத்தில் உரக் கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்து. அமைச்சரவையில் கலந்துரையாடி அதில் பாதியை தென்னைச் செய்கைக்கு வழங்க தீர்மானித்தோம்.தற்போதைய தேங்காய் நெருக்கடிக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வுகளைகாண முடியும்” என அவர் கூறினார்.

# மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு சானக்க எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, டிசெ. 19

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு ஒரே அளவிலான பாதுகாப்பை வழங்குவது எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் டி.வீ.சானக்க பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் இராணுவ அதிகாரிகளை முற்றாக நீக்கியுள்ளோம் என ஊடகங்கள் கூட செய்தி வெளியிட்டுள்ளன. ஊடகங்களும் இவ்வாறே தகவல் வெளியிட்டிருந்தன. ஒரு கைதியை அழைத்துச் செல்ல இரண்டு விசேட அதிரடிப்படை வாகனங்கள் தேவை. ஆனால் நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கான விசேட அதிரடிப்படை அகற்றப்பட்டு இராணுவமும் அகற்றப்பட்டுள்ளது. என்ன செய்யப் பார்க்கிறார்கள்? பாதாள உலகத் தலைவருக்கும் இரண்டு வாகனங்கள் வழங்கப் படுகின்றன. ஆனால் நாட்டைக் காப்பாற்றிய தலைவருக்கு 60 பொலிஸாரே காணப்படுகின் றனர். 60 சாதாரண பொலிஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதியை பாதுகாக்க முடியுமா? புலிகளும், புலம்பெயர் மக்களும் விரும் புவது போல் இதை செய்யா தீர்கள் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப் பண்ணைகள் தனியார் மயப்படுத்தலா?

## ஹேஷா விதானகே சபையில் கேள்வி

கொழும்பு, டிசெ. 19

**விவசாயப்பண்ணைகள் தனியார் மயமாக்கப்படாது என்ற உறுதிப்பாட்டை அரசாங்கத்தினால் வழங்க முடியுமா என எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே சபையில் கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அரச விவசாயப்பண்ணைகள் நட்டத்தில் இயங்குவதால் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையுடன் இணைந்தன.

சில திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக யோசனையை கடந்த அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அவ்வாறு நாணய நிதிய செயற்றிட்டத்தின் ஊடாக அடுத்த கட்ட நகர்வுளை முன்னெடுத்து செல்லும் சமயத்தில் நாட்டின் விவசாய பண்ணைகளை தனியார் மயமாக்க மாட்டோம் என்ற உறுதிப்பாட்டை இந்த அரசாங்கத்தினால் வழங்க முடியுமா என வினவ விரும்புகின்றேன்-என்றார் அவர்.

அதற்கு பதிலளித்த விவசாய மற்றும் கல்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன-

கடந்த அரசாங்கம் விவசாயப்பண்ணைகளை தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர அதில் நேரடியாக தொடர்புபட்டிருந்தார். ஆனால் நாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையின் விளைவாக அனை தடுத்து நிறுத்த முடிந்தது.

அரச விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்து முதலீட்டை கவரும் இடத்திற்கு கொண்டு வர வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அரச அனுசரணை யுடன் தேசிய ரீதியில் உள்ள தனியார் நிறுவனங்களை இணைத்துக்கொள்ள நடவ டிக்கை எடுக்கவுள்ளோம் ஆனால் அது தொடர்பில் எந்த தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விவசாயப்பண்ணைகளை வழங்க நாம் தயாராகவில்லை. அதற்கான எந்த முடிவுகளும் எடுக்கப்படவும் இல்லை-என்றார்.

# தனியாக பரீட்சை எழுதியதை நிரூபித்தால் வெளியேறுவேன்

## நாமல் ராஜபக்ஷ சவால்



கொழும்பு, டிசெ. 19

சட்டப் பரீட்சைக்கு முகங்கொடுத்த விதம் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் பரீட்சை மீள நடத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க சபையில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த அவமதிப்பு நாமல் ராஜபக்ஷவை இலக்காகக் கொள்ளவில்லை என்றும், முழு சட்ட அமைப்பையும் குறிவைத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் நீதி அமைச்சரிடம் தெரிவித்தார்.

ஏசி அறையில் தனியாக பரீட்சை எழுதியதாக நிரூபிக்கப்பட்டால் சபையை விட்டு வெளியேறுவேன் எனவும் அதனை நிரூபிக்க முடியாவிட்டால் வசந்த சமரசிங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் நாமல் மேலும் கூறினார். (அ)

# மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி!

கொழும்பு, டிசெ. 19

இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5.5 சதவீத நேர்மறை மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 29 இலட்சத்து 87,544 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் 31 இலட்சத்து 51,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய பொருளாதார நடவடிக்கைகள் 3 சதவீதமாகவும், தொழில்துறை நடவடிக்கைகள் 10.8 சதவீதமாகவும், சேவை பொருளாதார நடவடிக்கைகள் 2.6 சதவீதமாகவும் விரிவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# எமது அரசில் திருட்டு இல்லாததால் கல்வித் தகுதியைத் தேடுகின்றனர்!

## பிரதமர் ஹரினி அமரசூரிய

கொழும்பு, டிசெ. 19

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திருட்டுகள் தொடர்பில் தேட முடியாத காரணத்தினால் ஆளும் கட்சி உறுப்பினர்களின் தகுதிகள் பற்றி அறிய எதிர்க்கட் சிகள் முயற்சிப்பதாக பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எங்கள் அரசாங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் கல்வித் தகுதி தொடர்பில் பெரும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இங்கே இருக்கும் நம் பலரின் கல்வித் தகுதி தேடுகின்றனர்.

கடந்த காலங்களில் அமைச்சர்கள் மற்றும் அரசாங்கங்கத்தில் உள்ளவர்களின் கல்வித் தகுதிகள் தேடப்படவில்லை என்பது ஒருபுறம் எங்களுக்கு மகிழ்ச்சி. அவர்களின் திருட்டையே தேடினார்கள். எங்களின் திருட்டுகள் தொடர்பில் கண்டு பிடிக்க முடியாததால், கல்வித் தகுதியில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது சற்று முன்னேற்றமாகவே கருதலாம்-என்றார். (அ)

# பல பகுதிகளில் காற்றின் தரம் மீண்டும் மோசமான நிலையில்!

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு, கண்டி, காலி மற்றும் வடமாகாணத்தில் காற்றின் தரம் மீண்டும் மோசமான நிலையை எட்டியுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் குண வர்தன தெரிவித்துள்ளார்.

அண்மைய மோசமான வானிலை காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் சாதகமற்ற நிலையில் உள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தின் காற்றின் தரம் தொடர்பில் ஒரு மாத காலத்திற்கு தொடர்ச்சியான பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும், பாதகமான காரணிகள் இருப்பின் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், பரிசோதனைகளின் போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீங்கு விளைவிக்கக் கூடிய அளவில் காற்றின் தரம் காணப்ப டுமாயின் அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத் தும் பொறிமுறையை அமைப் பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் ஆராயுமாறு நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த உமாசுகி நடராஜா என்பவர் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# சிலிண்டர் சின்னத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை!

## தேசியப் பட்டியல் சர்ச்சைக்கு காஞ்சன விளக்கம்

கொழும்பு, டிசெ. 19

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட ரணில் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி கூட்டணியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களை வென்றது. இதில் சில கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தாலும் அவர்களுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமையே தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு யாரை நியமிப்பது என்பதில் சர்ச்சைகள் எழக் காரணமாக அமைந்துள்ளது.

இது குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றாக இணைந்து போட்டியிட்ட குழு பிரிந்து வெவ்வேறாக தனியாக போட்டியிடுவதா அல்லது ஒரு கூட்டணியாக போட்டியிடுவதா என்பதே எங்களுடைய முதலாவது காரணியாக அமைந்திருந்தது.

ஒரு கூட்டணியாக போட்டியிட தீர்மானிக்கும் போது எங்களுக்கு மூன்று யோசனைகள் முன்மொழியப்பட்டன. அதில், முதலாவது ரணில் விக்கிரமசிங்க சார்பில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவது, இரண்டாவது சுதந்திரக் கட்சி சார்பில் கதிரை சின்னத்தில் போட்டியிடுவது,மூன்றாவதாக பொதுச் சின்னம் ஒன்றில் கூட்டணியாக போட்டியிடுவது அவையாகும்.

யானைச் சின்னத்தில் போட்டியிட பெரும்பாலானோர் விரும்பவில்லை. கதிரைச் சின்னத்தில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் போட்டியிட விரும்பவில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய பொதுச்சின்னம் சிலிண்டர் சின்னம் என்பதால் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட தீர்மானித்தோம்.

கட்சியின் பொதுச்செயலாளர்என்ற அடிப்படையில்ஷியாமளி பெரேரா அவர் விரும்பிய இருவரின் பெயரை முன்வைத்துள்ளார்.

கட்சியின் பொதுச்செயலாளருக்கே தேசியப் பட்டியல் ஆசனங்களை நியமிக்க உரிமை உண்டு.

பொதுஜன பெரமுனவில் இருந்து வந்து ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய கருத்தாக இருந்தது.

எனது பெயரை தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு முன்மொழிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்-என்றார். (அ)

# கண்டி இ.போ.ச. டிப்போக்களில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

கொழும்பு, டிசெ. 19

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கண்டிப் பிராந்திய டிப்போக்களில் 75 சாரதிகளுக்கும் 36 நடாத்துனர்களுக்கும் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவை நிரப்பப்படாத காரணத்தால் பல பகுதிகளுக்குமான 25 பஸ் சேவைகளை இடை நிறுத்தியுள்ளதாக மத்திய பிராந்திய முகாமையாளர் பிரசன்ன தெல்லங்க தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

கண்டிப் பிராந்தியத்திலுள்ள 7 டிப்போக்களில் மேற்படி வெற்றிடங்கள் உள்ளன. கண்டி தெற்கு கண்டி வடக்கு யட்டிநுவர, வத்தேகம, தெல்தெனிய, உடதும்பறை, மாத்தளை ஆகிய ஏழு டிப்போக்களிலே மேற்படி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக பல பகுதிகளுக்குமான 25 பஸ் சேவைகள் கைவிடப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சாராய விற்பனையை தடுக்கக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

## வவுணதீவில் பல்வேறு தரப்பினர்களுக்கு மகஜர்

வவுணதீவு, டிசெ.19

**சட்டவிரோத சாராய விற்ப னைக்கு எதிராக மட்டக் களப்பு, வவுணதீவு பருத்திச்சேனை கிராம மக்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



பருத்திச்சேனை மங்கையர் கொத்தணியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

இதேவேளை, பருத்திச் சேனை கிராமத்தில் இருந்து தாண்டியடி கிராமத்துக்கு எதிர்ப்பு பதாகைகளை ஏந்திய வாறு சென்று அங்குள்ள விசேட அதிரடிப் படையினருக்கு போதைத்தடுப்பு தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து குறிஞ்சா முனை ஊடாக வவுணதீவுக்கு சென்று வவுணதீவு பொலிஸ ாருக்கும் மகஜர் கையளித்த மக்கள், தொடர்ந்து மண்முனை மேற்கு பிரதேச செயலகம் வரை சென்று பிரதேச செயலாளரிட மும் மகஜர் கையளித்தனர்.

பருத்திச்சேனை, காயான்மடு, புதுமண்டபத்து உள்ளிட்ட கிராமங்களை அண்டிய பகுதி களில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டு வரு கின்றது.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக்கோரியே மங் கையர் கொத்தணி மற்றும் கிராம மக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத் தனர். (எ)

# வி. ரி. சகாதேவராஜாவுக்கு பல்துறை வித்தகர் விருது



திருகோணமலை, டிசெ. 19

அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளம் ஊடகவியலாளருமான வி. ரி. சகாதேவராஜாவுக்கு பல் துறை வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா திருகோணமலை இந்து கலா சார மண்டபத்தில் நடைபெற்ற போதே இவ் விருது வழங்கப் பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலை மையில் நடைபெற்ற இந்த விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர இவ் விருதை வழங்கிக் கௌரவித்தார்.

இதன்போது, கிழக்கு மாகா ணத்தில் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட பல துறைகள் சார்ந்தவர்கள் விருதுகள் வழங் கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# திடீரென கடைக்குள் புகுந்த கார் ஏறாவூரில் அதிகாலையில் விபத்து



மட்டக்களப்பு, டிசெ.19

வேகமாக வந்த கார் ஒன்று மூடியிருந்த கடையை உடைத் துக்கொண்டு உட்புகுந்ததால் கடையும் கடைக்குள் நிறுத்தப் பட்டிருந்த வான் ஒன்றும் சேதமடைந்தன.

மட்டக்களப்பு, ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இந்த விபத்து சம்ப வித்தது.

இந்த விபத்தை ஏற்படுத்திய கார் பலத்த சேதமடைந்துள் ளது. சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமே இந்த விபத்துக்கு காரணமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென பொலிஸ ார் தெரிவித்தனர். (எ)

# தொழில் பயிற்சி நிலையம் ஓட்டமாவடியில் ஆரம்பம்

மட்டக்களப்பு, டிசெ.19


இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி நிலையம் மட் டக்களப்பு, ஓட்டமாவடியில் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர் விவகார மற்றும் விளையாட் டுத் துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் தொழில் பயிற்சி நிலையத்தின் தேசிய ரீதியான 56 ஆவது நிலையமும் மாவட் டத்தின் இரண்டாவது நிலை யமும் ஓட்டமாவடி பொது நூ லக கட்டடத்தில் ஓட்டமாவடி 'வொகேஸ்னல் ட்ரெயினிங் சென்ரர்' எனும் பெயரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநருக்கு பதிலாக வருகை தந்திருந்த அவருடைய இணைப்பதிகாரி உமர் ஹத் தாப் அப்துல்லாஹ் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளரு மான சட்டத்தரணி சிந்தக்க தர்சன ஹேவா பத்திரண ஆகியோர் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தனர்.

தேசிய இளைஞர் மன்றத் தின் பணிப்பாளர் சிந்தக்க ஹேவா பத்திரணவால் பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகா ரியாக மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிரேஷ்ட்ட அதிகாரி ஏ. ஹனீபா நியமிக்கப்பட்டார்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் செயலா ளர் தாஹிர் அக்கீல், திடீர் அனர்த்த சேவைகள் அமைப் பின் பணிப்பாளர் எம். ஏ. சி நியாஸ்தீன், பிரதேச சபையின் செயலாளர் ஷிஹாப்தீன், மாகாண, மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண் டனர். (எ)

# அம்பாறையில் அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்களுக்கு கருத்தரங்கு



கல்முனை, டிசெ.19

அம்பாறை மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்களுக்கான கருத்தரங்கு காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களப் பணிப் பாளர் ய. அநிருத்தனின் வழி காட்டலின் கீழ் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் 103 அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி வளவாளராக செயல்பட்டார். இதன்போது, பாடசாலை பதிவேடு, ஆசி ரியர் குறிப்பேடு, மாணவர்க ளின் குறிப்பேடு, அறநெறிப் பாடசாலை வழிகாட்டல் நூல், பண்ணிசை கருவிகள், குருபூசை நிகழ்வுகள், பாடத்திட்டம் தொடர்பான தெளிவூட்டல், ஆசிரியர் சீருடை விளக்கம், மாணவர் சீருடை விளக்கம், மாணவர்களின் வருகையை அதிகரிக்க செய்தல், தளபாட கொடுப்பனவு, யோகாசனம், பண்ணிசை கொடுப்பனவுகள், ஆக்கத்திறன் போட்டிகள், பெற்றோருக்கான கருத்தரங்கு, கூட்டுப்பிரார்த்தனை, இறுதி யாண்டு பரீட்சைக்கு மாணவர் கள் விண்ணப்பித்தல் தொடர் பான விளக்கம், தர்மாசிரியர் பரீட்சை விளக்கம், சுவாமி விபு லாநந்த மாநாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து விளக்கம ளிக்கப்பட்டது. இதே வேளை, 2025ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான 2025 ஆம் ஆண்டுக்குரிய பாடசாலை பதிவேடு என்பன வழங்கப்பட் டன. அம்பாறை மாவட்ட அனைத்து பிரதேச இந்து கலா சார உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்ட னர். (எ)

## மனித உரிமை பாதுகாவலர்களுக்கு செயலமர்வு

திருகோணமலை, டிசெ.19

திருகோணமலை மாவட் டத்தில் செயல்படும் மனித உரிமை பாதுகாவலர்களின் திறனை மேம்படுத்தல் - வலுப் படுத்தல் தொடர்பான செயல மர்வு திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற் றது.

வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் மையத்தின் ஏற் பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மனித உரிமை பாதுகாவலர்கள் என்றால் யார்? மனித உரிமை பாதுகாவலர்கள் என்பதன் வரைவிலக்கணம், மனித உரிமை மீறல்கள் எவ்வாறு? எங்கு நடைபெறுகிறது? அத னைத் தடுப்பதற்கான வழிமுறை கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதன்போது தெளி வூட்டல்கள் வழங்கப்பட்டன.

இந்தச் செயலமர்வில் திரு கோணமலை மாவட்ட ஊடக வியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# அம்புலன்ஸ் - பஸ் விபத்து! சாரதி உட்பட மூவர் காயம்

மட்டக்களப்பு, டிசெ.19

அம்புலன்ஸும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் சிறுகாயங்களுக் குள்ளா கியுள்ளதுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

மட்டக்களப்பு, களுவாஞ் சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட செட்டிபாளையத்தில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

களுவாஞ்சிகுடி நோக்கி வந்து கொண்டிருந்த அம்பு லன்ஸ் கல்முனை நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து மீது மோதியது.

இதன்போது, அம்புலன்ஸ் சாரதியும் அதில் பயணித்த பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசா ரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களத்துக்குச் சொந்தமான அம்புலன்ஸ் களுவாஞ்சிக்குடி பகுதிக்கு கடமை நிமித்தம் சென்றபோதே விபத்துக்குள்ளா கியுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

இதேவேளை, பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை யெனவும் பொலிஸார் தெரி வித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் கடும் அமளி இரு அவைகளும் ஒத்திவைப்பு

## ஜெய்பீம் முழக்கத்தால் அதிர்ந்த பாராளுமன்று இந்தியா கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, டிசெ.19

**இந்திய பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஜெய்பீம், ஜெய்பீம் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். இதனால், இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன. அத்தோடு, அமைச்சர் அமித்ஷா மன் னிப்பு கோர வேண்டும் என்று இந்தியா கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



பாராளுமன்ற மக்களவை, மாநில சட்டசபைகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான "ஒரே நாடு ஒரே தேர்தல்" திருத்த சட்டவரைவு மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், பாராளுமன்ற மாநிலங்களவையில் அரசியலமைப்பு பற்றிய 2 நாள் விவாதத்தின் முடிவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உரையாற்றினார்.

இதனையடுத்து, பாராளுமன்ற இரு அவைகளும் நேற்றுக்காலை கூடியபோது, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. அம்பேத்கரை பற்றி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சர்ச்சையாக பேசினார் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன் வைத்து தொடர்ந்து அவையில் அமளியில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, அந்தக் கட்சியின் தலைவர் கார்கே, தி. மு. க. எம்.பி டி. ஆர். பாலு உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அம்பேத்கரின் புகைப்படங்களை கைகளில் ஏந்தியபடி கோஷம் எழுப்பினர்.

அமித்ஷா உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.(எ)


# சிரியாவிலிருந்து 2000 கோடியுடன் ரஷ்யா தப்பிச் சென்றார் ஆசாத்

டமாஸ்கஸ், டிசெ.19

சிரியாவிலிருந்து ரஷ்யா தப்பிச் சென்ற ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் 2 ஆயிரம் கோடி ரூபாயை எடுத்துச் சென்றார் என்று தெரியவந்துள்ளது.

சிரியாவில் ஆசாத் அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. ஆசாத் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் இடம்பெற்றது. இதில் சுமார் 5 இலட்சம் பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி சிரியா இராணுவத்துக்கு எதிராக மிகப்பெரிய போரை துருக்கி ஆதரவு பெற்ற எச். டி. எஸ். கிளர்ச்சிப் படை தொடங்கியது. அதேநேரம், ஈரானும், ரஷ்யாவும் ஆதரவு தராததால் ஆசாத் தலைமையிலான சிரியா இராணுவம் பின்னடைவை சந்தித்தது. இதனால், முக்கிய நகரங் களைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள், தலைநகர் டமாஸ்கஸை கடந்த 8ஆம் திகதி கைப்பற்றினர்.



இதையடுத்து, ஜனாதிபதி ஆசாத் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றார். அவர் 2 ஆயிரம் கோடி ரூபாயை ரஷ்யாவுக்கு எடுத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தத் தொகையை கடந்த 2018 மற்றும் 2019 காலகட்டத்தில் ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொஸ்கோவின் நுகோவோ விமான நிலையம் சென்றடைந்த பணம், அந்த நாட்டு வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டதாகவும், ஆசாத்தின் உறவினர்கள் இதே காலத்தில் ரஷ்யாவில் இரகசியமாக சொத்துகளை வாங்கியதாவும் தகவல் வெளியாகியுள்ளது.

(எ)

# ஜார்ஜியாவில் இந்திய உணவகத்தில் விஷவாயு தாக்கி 12 பேர் உயிரிழப்பு

திபிலிசி, டிசெ.19

ஜார்ஜியாவில் இந்திய உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த 12 இந்தியர்கள் சடலாக மீட்கப்பட்டனர். இவர்கள் கார்பன் மோனாக்சைட் விஷவாயு தாக்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஐரோப்பிய நாடான ஜார்ஜியாவின் மலைப்பகுதியான குடவுரி என்ற இடத்தில் சொகுசு விடுதியுள்ளது. இதில் இந்திய உணவுகளை விற்பனை செய்யும் உணவகம் உள்ளது. இதில் வடஇந்திய தொழிலாளர்கள் 12 பேர் பணியாற்றி வந்தனர். இவர்கள் விடுதியின் இரண்டாவது மாடியில் உள்ள அறைகளில் தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் இவர்கள் தங்கள் அறைகளில் இருந்து சடலமாக மீட்கப்பட்டனர். அவர்கள் உடலில் காயம் எதுவும் இல்லை. அவர்களின் படுக்கை அறைகளுக்கு அருகிலேயே மூடிய பகுதிக்குள் மின் பிறப்பாக்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று இரவு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதும் மின்பிறப்பாக்கி தானாக இயங்கியது. அப்போது, கார்பன் மோனாக்சைட் விஷவாயு வெளியாகி இவர்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும், உயிரிழப்புக்கான காரணத்தை துல்லியமாக உறுதிசெய்ய தடயவியல் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(எ)

# மொசாம்பிக்கை தாக்கிய சூறாவளியால் 34 பேர் பலி

மபுதோ, டிசெ.19

மொசாம்பிக்கை தாக்கிய சூறாவளியால் 34 பேர் பலியாகினர். 319 பேர் காயமடைந்துள்ளனர்.

மொசாம்பிக் நாட்டின் பல பகுதிகளை சிடோ எனப் பெயரிடப்பட்ட சூறாவளி கடுமையாக தாக்கியது. இதனால் நியாஸ்சா, கபோ டெல்கடோ உள்ளிட்ட 3 மாகாணங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சூறாவளியால் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இதுவரை சிடோ சூறாவளி பாதிப்புக்கு 34 பேர் பலியாகினர். 319 பேர் காயமடைந்துள்ளனர். சூறாவளியால், 25



இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் கபோ டெல்கடோ மாகாணத்தில் உள்ள மெகுபி மாவட்டத்தில் சூறாவளி கரையை கடந்தது. கனமழை மற்றும் பலத்த காற்று வீசியதில் வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்களும் சரிந்தன.

சூறாவளியால் இதுவரை 23, 600 வீடுகள் மற்றும் 170 மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன.

(எ)

# விஷ சாராயம் அருந்தி துருக்கியில் 37 பேர் பலி

இஸ்தான்புல், டிசெ. 19

துருக்கியில் விஷ சாராயம் அருந்தி 37 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் 17 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து, கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கையில் அந்த நாட்டு அரசு இறங்கியுள்ளது. கடந்த 10 நாட்களில் 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 40 ஆயிரம் லீற்றர் கள்ளச்சாராயம் அழிக்கப்பட்டுள்ளதாக துருக்கி அரசு தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்யாவில் குண்டுவெடிப்பு

# அணுசக்தி பாதுகாப்பு படைத் தலைவர் பலி!

மொஸ்கோ, டிசெ.19

ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் மின்சார மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அந்த நாட்டின் அணுசக்தி மற்றும் இரசாயன, உயிரியல் பாதுகாப்புப் படையின் தலைவரான லெப்டினட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் பலியானார் என்று ரஷ்ய புலனாய்வு குழு தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி மாளிகை [illegible] கில் 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரியாஷன்ஸ்கி பிரோஸ்பெக்ட் அடுக்குமாடி குடியிருப்பின் வெளியே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இதுகுறித்து விசாரணைக் குழு கூறுகையில், ரஷ்ய கூட்டமைப்பின் அணுக்கதிர், ரசாயன உயிரியல் பாதுகாப்பு படையின் தலைவர் இகோர் கிரில்லோவ் மற்றும் அவரின் உதவியாளர் இருவரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் ரெலிகிராம் சனல்களில் வெளியிடப்பட்டுள்ள படங்களில், இடிபாடு



கள் நிறைந்த கட்டடத்தின் நுழைவாயிலும், பனிப்பரப்பில் இரத்தம் தோய்ந்த இரண்டு உடல்கள் கிடப்பதையும் காண முடிந்தது. இதுதொடர்பில் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(எ)

# ரஷ்ய ஜெனரல் உயிரிழப்பு உக்ரைன் உரிமை கோரல்

கீவ, டிசெ.19

ரஷ்ய ஜெனரல் கிரில்லோவ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டது தங்களால் தான் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது. கிரில்லோவ் ஒரு சட்டபூர்வ இலக்கு என்று உக்ரைன் பாதுகாப்பு சேவை அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் மீது தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி கிரில்லோவ் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியிருந்தது. ரஷ்யாவின் இரசாயன ஆயுதங்களின் பயன்பாட்டிற்காக இங்கிலாந்து உட்பட பிற நாடுகள் கிரில்லோவுக்கு தடை விதித்துள்ளன.

இந்த நிலையில் மொஸ்கோவில் வெடித்த குண்டு தொலை தூரத்தில் இருந்து இயக்கப்பட்டதாகவும், அதில் 300 கிராம் அளவுக்கு வெடிமருந்துகள் இருந்ததாகவும் ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவரிசை பட்டியலில் மந்தனா முன்னேற்றம்



டுபாய், டிசெ.19

ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீராங்கனை ஸ்மிருதி மந்தனா முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டது.

இதில், துடுப்பாட்ட தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்காவின் லாரா வோல்வார்ட் (773 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா (734 புள்ளி) 3 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

இந்தப் பட்டியலில் இலங்கையின் சமரி அத்தபத்து (733 புள்ளி) 3ஆம் இடத்திலும், இங்கிலாந்தின் நாட் ஸ்கிவர் பிரண்ட் (715 புள்ளி) 4ஆம் இடத்திலும் உள்ளனர். ஒருநாள் போட்டி பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் (771 புள்ளி) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியாவின் மேகன் ஸ்கட் (731 புள்ளி) 2ஆம் இடத்திலும், ஆஷ்லே கார்ட்னெர் (709 புள்ளி) 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

சகல வீராங்கனைகள் தரவரிசையில் தென்னாபிரிக்காவின் மரிசான் கேப் (444 புள்ளி) முதல் இடத்தில் நீடிக்கிறார். அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (398 புள்ளி) 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மேற்கு இந்திய தீவுகள் அணியின் ஹேலி மேத்யூஸ் (394 புள்ளி) 3ஆவது இடத்தில் உள்ளார் என்று ஐ. சி. சி. அறிவித்துள்ளது. (எ)

# ஓய்வு பெற்றார் அஸ்வின்


பிரிஸ்பேன், டிசெ.19

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.


இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் இரு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றிருந்தன. இந்த நிலையில் 3ஆவது டெஸ்ட் போட்டி நேற்று சமனில் முடிந்தது.

இந்த போட்டி முடிந்தவுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ரவிச்சந்திரன் அஸ்வின் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பை பி. சி. சி. ஐ. தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அஸ்வின் இந்திய அணிக்காக கடந்த 2010ஆம் ஆண்டு அறிமுகம் ஆனார். இவர் இதுவரை 106 டெஸ்ட், 116 ஒருநாள், 65 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அஸ்வின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஒட்டு மொத்தமாக 765 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். ஓய்வு பெற்ற அஸ்வினுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர். (எ)




# இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி சமனில் முடிந்தது



பிரிஸ்பேன், செ.19

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமனில் முடிந்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது. மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 445 ஓட்டங்கள் சேர்த்தது. இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 260 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதையடுத்து அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னிலையுடன் இந்தியாவுக்கு 275 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. தொடர்ந்து தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 2. 1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 8 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை பெய்தது. மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், மழை தொடர்ந்து பெய்ததால் இரு அணித் தலைவர்களும் போட்டியை முடிக்க ஒப்புக்கொண்டதால் ஆட்டம் சமனில் முடித்துக் கொள்ளப்பட்டது.

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் ஆட்ட நாயகன் விருது ஆஸி வீரர் ட்ராவிஸ் ஹெட்டுக்கு வழங்கப்பட்டது. இந்த தொடரில் இதுவரை 3 ஆட்டங்கள் முடிந்துள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமனில் முடிந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி மெல்பேர்னில் தொடங்குகிறது. (எ)

# 9 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி



மும்பை, டிசெ.19

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 போட்டிகள் நடைபெற்று வருகின்றன. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 62 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து 160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 15. 4 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 160 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் அதிகபட்சமாக ஹேலி மேத்யூஸ் 85 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் ரி - 20 தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. இதனால் தொடர் 1 - 1 என சமனில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி இன்று நடைபெறுகிறது. (எ)

# 2ஆவது போட்டியிலும் பங்களாதேஷ் வெற்றி

## சொந்த மண்ணில் சொதப்பிய மே. இ. தீவுகள்

ஜமைக்கா, டிசெ.19

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது ரி - 20 போட்டியில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை கைப்பற்றியது.

இரு அணிக ளுக்கும் இடை யிலான 3 போட் டிகள் கொண் ட ரி - 20 தொடர் நடை பெற்று வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 129 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதையடுத்து 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி களமிறங்கியது.

ஆனால், அந்த அணியினர் பங்களாதேஷின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர்.

இறுதியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 18. 3 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. இதன் மூலம் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை கைப்பற்றியது. பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக தஸ்கின் அகமது 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது. (எ)



# இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் அஸ்வின்

## விராட் கோலி புகழாரம்

பிரிஸ்பேன், டிசெ.19

இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் அஸ்வின் என்று விராட் கோலி புகழாரம் சூட்டியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ரவிச்சந்திரன் அஸ்வின் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், அஸ்வின் ஓய்வு குறித்து விராட் கோலி வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தளப்பதிவில்,

"நான் உங்களுடன் 14 வருடங்கள் விளையாடி இருக்கிறேன். இன்று(நேற்று) நீங்கள் ஓய்வு பெறுகி றீர்கள் என்று சொன்னபோது, அது என்னை கொஞ்சம் உணர்ச்சிவசப்படுத்தியது. நாம் ஒன்றாக விளையாடிய நினைவுகள் எனக்கு வந்தது. உங்களுடன் பயணத்தின் ஒவ்வொரு பகுதியையும் நான் இரசித்தேன், இந்திய கிரிக்கெட்டில் உங்களின் திறமை மற்றும் போட்டி வெற்றிப் பங்களிப்புகள் எதற்கும் இரண்டாவதாக இல்லை, நீங்கள் எப்போதும் இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவானாக நினைவு கூரப்படுவீர்கள். உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்க விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் நன்றி நண்பரே"- என கோலி குறிப்பிட்டுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

ஆணைக்குழுவின் செயலாளராக பொ. குகநாதனுக்கும், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலராக திருமதி ப.ஜெயராணிக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (அ-05)

## 16ஆயிரம்...

சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 04ஆம் திகதி முதல் அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கிய தன் பின்னர் 16,000 மெற்றிக் தொன் அரிசி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சீனாவுக்கு...

சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தி, புதிய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் கின் பொயோங் தெரிவித்தார்.

அதேபோல் நாட்டின் அனர்த்த நிலைமைகளின்போது உதவிகளை வழங்கியமை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கியமைக்காகவும் நன்றி கூறிய ஜனாதிபதி, சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் மத்திய அதிவேக வீதியில் சீனாவுக்கு பொறுப்பான பகுதிகளை நிறைவு செய்ய வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை மையப்படுத்தி விநியோக மத்தியஸ்தானம் மற்றும் நிறுவன வேலைத் திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும், பல்வேறு காரணங்களுக்காக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் சமுத்திர ஆய்வு பணிகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் உப தலைவர் இதன்போது கூறினார்.

## 2028ஆம்...

2028 ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாம் ஆட்சிக்கு வரும் போது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத் துடன், இரண்டாவது மீளாய்வை செய்திருந்தது. அதனை அடுத்து மூன் றாவது மீளாய்வை நாம் பொதுத் தேர்தலை தொடர்ந்து முன்னெடுத் தோம். அதன் போது இரண்டாம் மீளாய்வில் இணங்கிய பல விடயங்களில் திருதங்களை எம்மால் மேற்கொள்ள முடிந்தது.

உழைக்கும்போது அறவிடும் வரி தொடர்பில் துறைசார் நிபுணர்கள் மத்தியில் விரக்கதி காணப்பட்டது. அது தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம். அதற்கமைய மூன்றாம் மீளாய்வின் போது சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன், உழைக்கும் போது அறவிடும் வரி ஒரு இலட்சம் என்ற வரையறையை நாம் ஒன்றரை இலட்சம் என அதிகரித்துள்ளோம். இதற்கமைய ஒன்றரை இலட்சம் மாத வருமானம் பெறுபவர்களுக்கு 100 வீதி வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கூடிய வருமானம் பெறுபவருக்கு குறைந்த சலுகையும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அதிக நிவாரணம் கிடைக்கும் வகையிலும் உழைக்கும் போது அறவிடும் வரியில் திருத்தம் மேற்கொண்டுள் ளோம். - என்றார். (அ)

## 2025...

இதேவேளை 2028ஆம் ஆண்டளவில் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்க ளாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 2022 இல் இருந்த நிலைமைக்கு நாடு மீண்டும் செல்லாது எனவும் ஜனாதிபதி இதன் போது உறுதியளித்தார். (அ)

## வரியில்...

இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான மாத வருமானத்தைப் பெறுகின்றவர்கள், வருமானம் ஈட்டும் போது செலுத்த வேண்டிய வரியை செலுத்த வேண்டியதில்லை.

அதேநேரம் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு அதிக வரி சலுகைகளும், அதிக வருமானம் ஈட்டுகின்றவர்களுக்குக் குறைந்த வரி சலுகைகளும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

அதேநேரம் வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என்றும், அதற்காக நாட்டின் பொருளாதாரத்துக்கு பொருத்தமான பொறிமுறை ஒன்று கடைபிடிக்கப்படும் என்றும் ஜனாதிபதி அனுரகுமார தெரிவித்தார்.

இதேவேளை 2028 ஆம் ஆண்டளவில் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார். (அ)

## நாட்டை...

உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

இந்தியாவுடன் மின்சக்தி கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும், குழாய் தொடர்புகளைப் பேணுவதற்கும், கலாசார தொடர்பைப் பேணுவதற்கும், இந்திய ரூபாவினை இலங்கையில் பயன்படுத்துவதற்கும், நில மற்றும் கடல் வழி தொடர்புகளைப் பேணுவதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்தியாவுடன் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டால், ஏனைய நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சியாக இருக்கும்போது தேசிய மக்கள் சக்தி கூறியது.

எனினும், தற்போது, இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்த எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டார்.

இந்த நிலையில், இந்தியா தொடர்பிலும், எட்கா தொடர்பிலும் முன்னதாக தெரிவித்த கருத்தைத் தேசிய மக்கள் சக்தி தற்போது மீளப் பெறுமா என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

இதன்போது கருத்துரைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், உள்நாட்டில் மின்சக்தி உற்பத்தி செய்வதாகவும் மேலதிக மின்சக்தியை பிம்ஸ்டெக் அமைப்பின் பொருளாதார ஒத்துழைப்புடன் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் நாம் முன்னதாக கூறியிருந்தோம். இதனூடாக, இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

அதனை விடுத்து, நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு உடன்படிக்கையையும் இந்தியாவுடன் கைச்சாத்திடவில்லை.

இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் மின்சக்தி தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்கொண்டு செல்லப்படும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நாட்டை காட்டிக் கொடுக்கும் எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடவில்லை - என்றார். (அ)

## அர்ச்சுனா...

குரோதத்தை வெளிப்படுத்தினார்.

இதனையடுத்து, அவரது பேச்சு இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

சபை முதல்வர் பிமல் ரட்நாயக்க எழுந்து, பாராளுமன்றத்தில் நடந்துகொள்ளவேண்டிய, எழுப்பப்படும் கேள்விகள் பற்றி அர்ச்சுனாவுக்கு புரியும்படி வாசித்தார். எனினும் அதையும் கேட்காமல், அர்ச்சுனா கூச்சலிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீதும், ஓ.எல் சித்தியடையாதவர் என கூறி கூச்சலிட்டார்.

இதன்போது - பிமல் ரட்நாயக்க தலையிட்டு- கிண்ணியாவில் நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்ட மேடையில் இருந்து கீழே இறக்கப்பட்டதற்கு கணக்கு தீர்க்கிறீர்களா எனக் கேட்டார்.

இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. இதனால் அர்ச்சுனா சங்கடத்தில் நெளிந்தபடி உட்கார்ந்தார்.

## அநுர..

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி இன்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதும் அவரது இந்திய பயணம் தொடர்பில் எவ்வித கருத்துகளை முன்வைக்கவில்லை. இது குறித்து கவலையடைகிறோம். ஜனாதிபதியின் முதல் பயணமாகும் இது. இந்த பயணம் மற்றும் இதன்போது எட்டப்பட்ட உடன்பாடுகள் தொடர்பில் தெரிந்து கொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடி இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு தொடர்பிலான கூட்டறிக்கை எமக்கு கிடைக்கப்பெற்றது. இந்தியா இலங்கை இடையில் பாலம் அமைத்து தொடர்பில் நாம் பல்வேறு வகையிலும் சிந்திக்க வேண்டும். எமது சுயாதீனம், கலாசாரம் மற்றும் எமது வேலைவாய்ப்புக்காக பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். டிஜிற்றல் உடன்பாடுகளை இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளும் போது இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் அது இருக்க வேண்டும்.

எரிசக்தி தொடர்பில் ஏற்படுத்தும் உடன்பாடு மிகவும் முக்கியமானது. இந்திய - இலங்கை மின்சார இணைப்பு தொடர்பில் இரண்டு தசாப்தங்களாக நாம் பேசுகிறோம். அது தொடர்பில் உரிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். இருநாடுகளிலும் மின்சார பற்றாக்குறை ஏற்படும் போது பரிமாற்றிக்கொள்ள வேண்டும். கடல் மார்கமாக இதனை அமைக்கும் போது ஏற்படும் செலவுகள் தொடர்பில் உரிய இணக்கப்பாடுகள் ஏற்பட வேண்டும். இதுதொடர்பில் இந்தியாவுடன் மோதும் நிலை உருவானால் பாரதூரமான பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடம்.

இந்தியா - இலங்கைக்கு இடையில் கேபிள் முறையில் உருவாக்கப்படும் இத்திட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் எவ்வாறு தொடர்புபடுகிறது. இது தொடர்பில் துறைசார் அமைச்சராக ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தியாவுடனான உறவானது ரணில் விக்ரமசிங்க ஏற்படுத்திக்கொண்ட உறவையும் விட மேலானதாக உள்ளது. அதனால் ரணில் - ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெறுவதாக கடந்த காலத்தில் நாம் விமர்சனங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அவ்வாறே பின்பற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் அநுர விக்ரமசிங்க ஆட்சியா நாட்டில் நடைபெறுகிறதா என கேள்வி கேட்கவேண்டியுள்ளது. அது அவ்வாறு இல்லை என ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## தரம் 5...

அறிவிப்பதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது இந்த மனுக்கள் யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவ ரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் மூன்று நாள்களாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் மற்றும் பிரதிவாதி சார்பில் அனைத்து சட்டத்தரணிகளின் வாய்மொழி விவாதங்கள் தற்போது முடிவடைந்துள்ளது எழுத்துபூர்வ உரைகள் இருப்பின் அவற்றை இன்று காலை 9 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தர விடப்பட்டுள்ளது

அதன்படி, இந்த மனுக்கள் தொடர்பான முடிவு எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ)

## போதனா...

சட்டத்தரணி த.தினேசன் அனுசரணையுடன், சட்டத்தரணி கலாநிதி கு. குருபரன் ஏற்பாடாகியிருந்தார்.

வழக்காளியான வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தி தடுப்புக் காவலில் இருந்த போது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவருக்கு அவதூறாக எதிராளி வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவினால் சொல்லப்பட்ட விட யங்கள் மற்றும் 09.12.2024 அன்று இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தியுடன் சில வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்குக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலும், அன்றைய தினத்தில் இராமநாதன் அர்ச்சுனா தன் முகப் புத்தகத்தில் வெளியிட்ட காணொளி ஊடாக அவதூறு பரப்பப்பட்டதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

ஏதிராளியான இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்திக்கு எதிராக, அவருடைய மாண்பு மற்றும் கீர்த்திக்கு பங்கம் விளைவிக்கும் கருத்துக்களை தெரிவிப்பதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவரால் கூறப்படும் கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதோடு அடிப்படை அறமற்ற நபர் ஒருவருடைய கருத்தாகும் என்று வழக்காளி சத்தியமூர்த்தி தனது சத்தியக் கூற்றில் தெரிவித்திருந்தமை தொடர்பில் சட்டத்தினையும், நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளையும் சுட்டிக் காட்டி நீண்ட சமர்ப்பணம் வழக்காளி தரப்பில் மன்றில் முன்வைக்கப்பட்டது.

மேலும் வழக்காளி தனது சத்தியக் கூற்றிலேயே தனது நோக்கம் எதிராளியான இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், குடிமகன் என்ற வகையில் அல்லது பொது நிறுவனங்களை பொறுப்புக் கூற வைக்கவேண்டும் என்ற நியாயமாகச் செயற்படும் இடத்து, அவற்றுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் பொய்யான வகையிலும், அவதூறான வகையிலும் அவரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கட்டளையாக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

குறித்த விடயங்களை செவிமடுத்த நீதிபதி வழக்காளியால் கோரப்பட்டவாறு, அவருக்கு எதிராக அவதூறான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கக் கூடாது என எதிராளி அர்ச்சுனாவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது ஒரு முகமாக வழக்காளி தரப்பை மட்டும் கேட்டு வழங்கப்படும் கட்டாணை என்பதால், இது தொடர்பான அறிவித்தல் எதிராளிக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டாணை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வலிதாக இருக்கும். அன்றைய தினம் அதனை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான தீர்மானத்தை நீதிபதி எடுப்பார்.

இது தொடர்பில் எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவுக்கு கட்டளையின் பிரதியையும், அறிவித்தலையும் வழங்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கல்வித் தகைமையை நேற்று சபையில் முன்வைத்தார் சஜித்

## அது போலியென நிரூபித்தால் பதவி விலக தயார் என அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கல்வித் தகைமைகளை நேற்று சபையில் சமர்ப்பித்தார்.**

தனது முன்பள்ளிக் கல்வியை செயின்ட் பிரிட்ஜெட்ஸ் பாடசாலையிலும், ஆரம்பக் கல்வியை (தரம் 1 முதல் தரம் 5 வரை) புனித தோமஸ் ஆரம்பப் பாடசாலையிலும், (தரம் 6 முதல் தரம் 9 வரை) றோயல் கல்லூரியிலும் கற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர் அவர் இங்கிலாந்தில் உள்ள மில்ஹில் கல்லூரியில் படித்ததாகவும், 1983 - 1984 ஆம் ஆண்டில், அந்த நாட்டில் பொதுத் தேர்வுக்குத் தோற்றியதாகவும், தேர்வில் 2 ஏ தேர்ச்சி, 2 பி மற்றும் 3 சி தேர்ச்சியுடன் தேர்ச்சி பெற்றதாகவும் பெறுபேறுகளை அவர் காண்பித்தார்.

மேலும் 6ஆம் வகுப்பில் அரசியல் அறிவியல் மற்றும் பொருளாதாரத்திற்கான மில்ஹில் கல்லூரிப் பள்ளிப் பரிசை ஏ லெவலுக்குச் சமமாக வென்றதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சையில் 2 பி சித்தியும் ஒரு சி சித்தியும் பெற்று சித்தியடைந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானப் பள்ளியில் நுழைந்து 1991 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தனது பட்டப்படிப்பை முடித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பின்னர், அவர் அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் பல்கலைக்கழக கல்லூரி பூங்காவில் பொது மேலாண்மை குறித்த முதுகலைப் படிப்பில் சேர்ந்தார்.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இணைந்து முதுகலைப் பட்டம் கற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவின் கல்வித் தகுதிகள் குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், தாம் முன்வைத்துள்ள கல்வித் தகைமைகள் போலியானவை என யாராவது நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் பதவிகளில் இருந்தும் விலகத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# யாழில் எலிக்காய்ச்சலால் இதுவரை 110 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாண மாவட்டத்தில், எலிக்காய்ச்சல் நோய் காரணமாக, இதுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 24 மணி நேரத்தில், பருத்தித்துறையில் 6 பேரும், யாழ்ப்பாணத்தில் 5 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாண அலுவலகத்தில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# அரசாங்க நிதிக்குழு தலைவராக ஹர்ஷ!

கொழும்பு, டிசெ. 19

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்தின்போது, நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2024 டிசெம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக குழுவின் தவிசாளராக கலாநிதி ஹர்ஷ த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பணியாற்றுவதற்கான ஏனைய உறுப்பினர்களின் பெயர்களையும் சபாநாயகர் நேற்று சபையில் அறிவித்தார்.

இதற்கமைய, கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கோன், சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# அதானி குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதில் தடை இல்லை!

## சபையில் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 19

அதானி குழுமம் ஏனைய நாடுகளுடன் முன்னெடுக்கும் பரிவர்த்தனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் எக்கொனமிக் ரைம்ஸ் ஊடகத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

நாங்கள் அடிப்படையில் எங்கள் முதலீடுகள், எங்கள் வளர்ச்சி பற்றி அக்கறை கொண்டுள்ளோம். அதானி குழுமம் ஏனைய நாடுகளுடன் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதில் இலங்கை அக்கறை கொள்வதில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதானி நிறுவனம் நாட்டில் எவ்வாறான பணிகளை முன்னெடுக்கிறது என்பது குறித்தே கவனம் செலுத்துவதாகவும் முயற்சிகளுக்கு ஏற்ற வகையில் பணியாற்றியிருந்தால், அதானி குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முக்கியமான முதலீடுகளைக் கொண்டுள்ள அதானி குழுமத்துக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை அரசாங்கம் அதே கோணத்தில் அந்த நிறுவனத்தை பார்க்காது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்கும் அதானி குழுமம் எரிசக்தி துறையில் முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கிறது.

எனினும், துரதிஷ்டவசமாக, சுற்றுச்சூழல் அக்கறை கொண்டவர்களால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குறித்த வழக்கில் நன்மை தீமைகள் மற்றும் மக்களின் ஒருமித்த கருத்து ஆகியவற்றை நாங்கள் கவனத்தில் கொள்வோம். பின்னர் எது சிறந்தது என்பதைப் பரிசீலிப்போம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ)

# வைத்தியர் சத்தியமூர்த்தியை பொறுப்புகளிலிருந்து நீக்குக!

## சபையில் கோரிய அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, டிசெ. 19

வைத்தியர் சத்தியமூர்த்தியை யாழ். போதனா வைத்தியசாலை பொறுப்புகளில் இருந்து அகற்றுமாறு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.போதனா வைத்தியசாலையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் எந்தவித ஒப்பந்தங்களும் இன்றி 170 இளைஞர் யுவதிகள் சேவையாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு மாதம் 10,000 ரூபாய் சம்பளம் ஒதுக்கப்படும் என தெரிவித்திருந்த நிலையில் குறித்த தொகை 5 மாதங்களே வழங்கப்பட்டிருந்தது. இது ஒரு மிலேச்சத்தனமான குற்றம். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட பணியாட்களுக்கு சுகாதார அமைச்சர் வாய்மொழி மூலம் வாக்குறுதிகளை வழங்கி இருந்துள்ளார்.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட பணியாட்கள் வைத்தியசாலை சென்றபோது வைத்தியசாலைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியால் மிலேச்சத்தனமாக மிரட்டப்பட்ட காவலாளிகளால் வெளியேற்றப்பட்டனர். அதன்போது அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, நான் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் வைத்தியசாலைக்கு சென்றபோது வைத்தியர் சத்தியமூர்த்தி என்னை தரம் குறைவான ஆளாக நடத்தி அவரின் அறிவுறுத்தலின் படி காவலாளி மற்றும் பொலிஸ் மூலமாக வெளியேற்றினார் - என்றார்.

அது தவிர தனக்கு எதிராக வழக்கும் பதியப்பட்டுள்ளதாகவும், இதுவரை தனக்கெதிராக 19 வழக்குகள் உள்ளதாகவும் தமிழர்களுக்காக நெஞ்சில் சூடு வாங்கவும் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆகியோரை அவர் கடுமையாக தாக்கி பேசியிருந்தார். இதன்போது சபாநாயகரால் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டது. (அ)

# மோடியின் வலியுறுத்தலை நாங்கள் வரவேற்கிறோம்!

## கூறுகின்றார் சுமந்திரன்

கொழும்பு, டிசெ. 19

அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியினால் வலியுறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனுள் 13 ஆவது திருத்தமும் உள்ளடங்குவதனால் அவ்வலியுறுத்தலை தாம் வரவேற்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தியப் பயணம் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் முழுமையான அமுலாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்பன தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வலியுறுத்தலை வரவேற்கிறோம்.

குறிப்பாக அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பிரதமர் மோடி எதனையும் குறிப்பிடவில்லை எனச் சிலர் அதிருப்தி வெளியிடுவதைக் காணமுடிகிறது. இருப்பினும் அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் உள்வாங்கப்பட்டிருப்பதன் காரணமாக அந்த அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துகையில் அதில் 13 ஆவது திருத்தமும் உள்ளடங்குகிறது-என்றார். (அ)

# இந்தியா உட்பட 39 நாடுகளுக்கு மிகவிரைவில் இலவசமாக விஸா

கொழும்பு, டிசெ. 19

இந்தியா உட்பட 39 நாடுகளின் குடிமக்களுக்கு விசாக்களை இலவசமாக வழங்கும் வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் விரைவில் வெளியிடும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதிய அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சாதகமான உறவுகளை விரும்புகிறது.

ஒரு புதிய அரசாங்கமாக சீனாவுடனும், இந்தியாவுடனும் நல்ல உறவைக் கொண்டிருக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்தியாவும் இலங்கையும் பாதுகாப்பு, எரிசக்தி, வர்த்தக உறவுகளை மேம்படுத்த முடிவு செய்துள்ளன.

இலங்கை சுற்றுலாத் துறையில் மூன்று தொடர்ச்சியான பாதிப்புகளை கடந்த காலத்தில் சந்தித்தது. 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், 2020-21 இல் கோவிட் தொற்றுநோய், மற்றும் 2022 இல் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் திருப்பிச் செலுத்தாமை என்பனவே அந்தப் பிரச்னைகள்.

எமது பொருளாதாரத்தை பலப்படுத்த இந்தியா உட்பட 39 நாடுகளின் குடிமக்களுக்கு விஸாக்களை இலவசமாக வழங்க உள்ளோம். இதற்கான வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் விரைவில் வெளியிடும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.